31.8.18 அ.வ.எண். 133-11 பிவாசா1 - நாகமுத்து

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணத்தின்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது தம்பி மச்சக்காளை இறந்து சுமார் 15 ஆண்டுகள் இருக்கும். பிவாசாஆ 1 ஆவணத்தில் மச்சக்காளையின் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் சரிதான். அவருடைய மகன்கள் காசி, முனியாண்டி ஆகியோர் பெயர்கள் பட்டா பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 1 ஆவணம் வழக்கிற்கு பின்னிட்டு வாங்கப்பட்டது என்றும் அதனால் செல்லாது என்றும் சொன்னால் சரியல்ல. பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு நான் கொடுத்தேன். வாதி தரப்பில் வாதியும் 1, 2 பிரதிவாதிகளும் விசாரணைக்கு வந்தார்கள். அவ்வாறு எங்களை விசாரணைக்கு அழைத்ததற்கான அறிவிப்பு எதையும் தாக்கல் செய்யவில்லை. நாங்கள் கொடுத்த மனுவின் நகலினை தாக்கல் செய்யவில்லை. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் தமிழரசன் பெயரினை கூட்டுப்பட்டாவில் சேர்ப்பதற்கான விசாரணைக்கு நான் ஆஜராகியதாக கூறியுள்ளேன். அதுகுறித்து எங்களை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தான் விசாரித்தார்கள். தாசில்தார் அலுவலகத்தில் விசாரிக்கவில்லை. உண்மையில் தாவா சொத்தில் எனக்கும் என் தம்பி மச்சக்காளைக்கும் உரிமையிருந்திருந்தால் தற்போது பெற்ற பிவாசாஆ 1 பட்டாவில் மச்சக்காளையின் மகன்கள் பெயரும் இடம் பெற்றிருக்கும் என்றால் சரியல்ல. தமிழரசன் பெயரிலுள்ள பட்டாவில் துணை வட்டாட்சியர் தமிழ்செல்வி என்று அவர் கையெழுத்திடவில்லை என்றும் அது மோசடியானது என்றும் சொன்னால் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தையும் எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு உரிமையிருந்திருந்தால் பட்டாவில் தமிழரசன் பெயருக்கு முன்பு எங்கள் பெயர் தான் இடம் பெற்றிருக்கும் என்றும் அவர் பெயருக்கு பின்னால் எங்கள் பெயர் வராது என்று சொன்னால் சரியல்ல. 10ம் பிரதிவாதி தமிழரசன் எனது மதினியார் மகன். 10ம் பிரதிவாதியின் தூண்டுதலின்பேரில் தான் வழக்கை நான் நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

(6 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

ம.வி.இல்லை.

/Sd./Nagamuthu

Taken down be me in open court

Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.

/Sd.. M. Udhayavelavan,
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.